**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 432/2018**
**வழக்கு சாட்சி PW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கனிராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வெள்ளையன் | தொழில் | : | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | இலஞ்சி | வயது | : | 65 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Monday of 15.06.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. சாட்சி காணொளி மூலம் ஆஜரானார். )**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்று, இலஞ்சியில் குடியிருந்து வருகிறேன். நான் கடையநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 13.05.2016 ம் தேதி 21.30 மணிக்கு அபுபக்கர் சித்திக் என்பவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று, அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.154/2016, சட்டப்பிரிவுகள் 447, 427, 294(பி), 506(2) இதச வின் படி முதல்தகவல்அறிக்கை பதிவு செய்தேன். முதல்தகவல்அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். அந்த வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

14.05.2016 ம் தேதி, காலை 09.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் முகமது இப்ராஹிம் மற்றும் முகமது காலித் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை

மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆகும். பின்னர், சாட்சிகள் அபுபக்கர் சித்திக், ஷேக்முகமது, செய்யது மசூது, இசக்கிமுத்து, முகமது இப்ராஹிம், முகமது காலித் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. அத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

முதல்தகவல்அறிக்கையில் சம்பவ நேரம் மதியம் 01.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் வாதியின் காலி மனையில் நடந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்ற இறுதிஅறிக்கையில் சம்பவம் மதியம் 02.00 மணிக்கு நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கையில் உடைக்கப்பட்ட ஓஸ் பைப்பின் மதிப்பு ரூ.5000/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சேதப்படுத்தப்பட்ட ஓஸ் பைப்பை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். எதிரி என்ன மாதிரியான கல்லை பிடுங்கி எறிந்தார் என்று குறிப்பிட்டு புகார் மனுவிலும், என்னுடைய விசாரணையிலும் சாட்சிகள் கூறவில்லை என்றால் சரிதான்.

சேதப்படுத்தப்பட்ட காம்பவுண்ட் சுவரின் மதிப்பு காட்டப்படவில்லை என்றால் சரிதான். கல்லை உடைத்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கல்லை உடைக்க பயன்படுத்திய சுத்தியல், கடப்பாறையை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தின் அருகே இருப்பதாக வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை சாட்சிகளாக நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவயிடம் புகார்தாரருக்கு சொந்தமானது என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை.

நான் சொன்ன நாள், நேரத்தில் புகார்தாரிடம் இருந்து புகார் மனு எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி கனிராஜ் இல்லத்தில் இலஞ்சி கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Balamurugan, கிராம நிர்வாக அலுவலர், இலஞ்சி என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.16 18:37:56 +0530